

# மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ்

தொகுதி XI– ஜனவரி 2022

# பகுப்பாய்வு தொடர்புகள்


## ஈக்விஃபாக்ஸ்

**கிரண் சமுத்ராலா**
துணைத் தலைவர் –
பகுப்பாய்வு
kiran.samudrala@equifax.com

**ஸ்ருதி ஜோஷி**
உதவி துணைத்தலைவர்–
பகுப்பாய்வு
shruti.joshi@equifax.com

**வந்தனா பாஞ்சால்**
மூத்த நிர்வாகி. – பகுப்பாய்வு
vandana.panchal@equifax.com

## சிட்பி

**சந்திர சேகர் தான்வி**
தலைமை பொது மேலாளர் –
எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ
erdav@sidbi.in

**ரங்கதாஸ் பிரபாவதி**
துணை பொது மேலாளர்
எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ
erdav@sidbi.in

**ரமேஷ் குமார்**
மேலாளர்
எம்.பி.ஐ.வி- ஈ.ஆர்.டி.ஏ
rameshk@sidbi.in

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிர்வாகச் சுருக்கம் | 04 |
| சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம் | 05 |
| குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம் | 06 |
| விநியோக போக்குகள் | 09 |
| தொழில்துறை இடர் தோற்றவிவரம் | 12 |
| புவியியல் வெளிப்பாடு | 14 |
| விரிவான மாநில தோற்றம்: மத்திய பிரதேசம் | 17 |
| லட்சிய மாவட்டங்கள் | 22 |
| குறுந்தொழில் துறையின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி | 24 |

# நிர்வாகச் சுருக்கம்

MFI பல்ஸ் அறிக்கையின் 11வது பதிப்பு, செப்டம்பர் 2021 வரையிலான காலக்கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் ஸ்னாப்ஷாட்டையும், இந்தக் காலகட்டத்தில் மைக்ரோஃபைனான்ஸ் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் முன்வைக்கிறது.

செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி MFI தொழில்துறையின் மொத்த கடன் அளவு ரூ 2,26,123 கோடி. வங்கிகள், SFBகள் மற்றும் NBFC-MFIகள், போர்ட்ஃபோலியோ நிலுவையில் 90%க்கு அதிகமாகவும், வினியோகிக்கப்பட்ட தொகையில் 95%க்கும் அதிகமாகவும் பங்களிக்கின்றன. குறுநிதித் துறை, ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில், காலாண்டுக்கு காலாண்டு (Q-o-Q) 2% வளர்ச்சியை கண்டது. வங்கிசாரா நிதி நிறுவனங்கள்-எம்.எஃப்.ஐ (NBFC-MFI) செப்டம்பர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) 14% வளர்ச்சியைக் கண்டது மற்றும் ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரை Q-o-Q 10% வளர்ச்சியை கண்டுள்ளது. ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் வங்கிகளின் போர்ட்ஃபோலியோ நிலுவைத் தொகை 3% குறைந்துள்ளது.

JAS' 20 இலிருந்து JAS' 21 ஆன காலகட்டத்தில் வழங்கப்பட்ட கடனின் எண்ணிக்கை 94% அதிகரித்துள்ளது மற்றும் அதே காலகட்டத்தில் வழங்கல் தொகை 96% அதிகரித்துள்ளது. அனைத்து காலாண்டுகளிலும் ரூ.30000-40000 ஆன கடன் வகையின் கீழ் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்படுகின்றன. JAS '20 இலிருந்து JAS '21 வரையான காலகட்டத்தில் சராசரி கடன் அளவு 1% அதிகரித்துள்ளது.

ஜூன் 2021 இலிருந்து செப்டம்பர் 2021 இல் அனைத்து வகை கடன் தவணை தவறுதல்களும் குறைந்துவிட்டன. ஜூன் 2021 தவிர அனைத்து காலாண்டுகளிலும், 60-89 நாட்கள் தவணை தவறுதல் வகை மிகக் குறைவாக உள்ளது.

மொத்த போர்ட்ஃபோலியோ நிலுவையில், தமிழ்நாடு 13% பங்களிப்புடன், 29,335 கோடி ரூபாய் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவுடன் முன்னணியில் உள்ளது. செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி தமிழ்நாடு, மேற்கு வங்காளம், பீகார், கர்நாடகா மற்றும் உத்தரபிரதேசம் ஆகியவை முதன்மை 5 மாநிலங்களாக உள்ளன. முதல் 5 மாநிலங்களில், மேற்கு வங்கத்தில் மட்டும் 90+ நாட்கள் தவறிய தவணைகள், மொத்த தொழில்துறை தவறுதல்களை விட அதிகம்.

மத்தியப் பிரதேசம் பற்றிய விவரங்கள் விரிவான மாநில விவரமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி மத்தியப் பிரதேசத்தின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ.13,920 கோடி. நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில், NBFC-MFIகளும், அதைத் தொடர்ந்து வங்கிகளும் அதிக பங்களிக்கின்றது. மத்தியப் பிரதேசத்தில் JAS '21 இன் போது 4,340 கோடி ரூபாய் மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் சராசரி கடன் அளவோடு ஒப்பிடும்போது NBFCகள் மற்றும் வங்கிகளின் சராசரி கடன் அளவு அதிகமாக உள்ளது. மத்தியப் பிரதேசத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், ஒட்டுமொத்த குறுநிதித் துறையின் தவறுதல் நிலைகளை விட அதிகமாக உள்ளது.

இந்த பதிப்பில் குறுங்கடன் துறையின் ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) வளர்ச்சியை மதிப்பீடு செய்துள்ளோம். மார்ச் 2020 முதல் நாடு தழுவிய லாக்டவுன் காரணமாக குறுநிதித் துறை மந்தநிலையைக் கண்டது. கடன் பெறுதல், அக்டோபர் 2018 முதல் செப்டம்பர் 2019 வரையிலான காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, அக்டோபர் 2019 முதல் செப்டம்பர் 2020 வரையிலான காலகட்டத்தில், அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் முறையே 28% மற்றும் 24% ஆக சுருங்கியது. இருப்பினும், மைக்ரோஃபைனான்ஸ் தொழில் மீண்டும் விரிவாக்க முறைக்கு திரும்பியுள்ளது மற்றும் அக்டோபர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் அளவு மற்றும் மதிப்பில் 35% மற்றும் 37% முறையே வளர்ச்சியடைந்துள்ளது.

# சொல் சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம்

- ATS (Average Ticket Size) = Disbursed Amount/Number of Loans

  (சராசரி கடனின் அளவு) = வினியோகிகப்பட்ட தொகை / கடன்களின் எண்ணிக்கை
- DPD = Days Past Due - திருப்பிசெலுத்த வேண்டிய காலம் கடந்த நாட்கள்
- Live POS or Borrowers or Active loans = 0 to 179 DPD + New Accounts + Current Accounts

  நேரடி நிலுவையில் உள்ள கடன்கள் (அ) கடனாளிகள் (அ) செயலில் உள்ள கடன்கள் = 0 லிருந்து 179 DPD + புதிய கணக்குகள் + நடப்புக் கணக்குகள்
- MFI = Microfinance Institution குறுந்தொழில் நிதி நிறுவனம்
- POS = Portfolio Outstanding நிலுவையில் உள்ள கடன்களின் போர்ட்ஃபோலியோ
- UT = Union Territory யூனியன் பிரதேசம்
- Aspirational Districts (AD) - லட்சிய மாவட்டங்கள்
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர் வளங்கள், நிதி சேர்க்கை, திறன் வளர்ச்சி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற கூட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில், மனித மேம்பாட்டு குறியீட்டை மேம்படுத்துவதற்காக ஜனவரி 2018 இல் NITI ஆயோக், இந்திய அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட மாவட்டங்கள் (தற்போதைய எண்ணிக்கை 117).
- 1-179 = 1 to 179 DPD/Live POS
- 1-29 = 1 to 29 DPD/Live POS
- 30-59 = 30 to 59 DPD/Live POS
- 60-89 = 60 to 89 DPD/Live POS
- 90-179 = 90 to 179 DPD/Live POS
- 30+ நாட்கள் தவணை தவறுதல் (Delinquency) = 30-179 DPD/Live POS
- 90+ நாட்கள் தவணை தவறுதல் (Delinquency) = 90-179 DPD/Live POS

- JAS'20 = ஜூலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை
- OND'20 = அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 வரை
- JFM'21 = ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை
- AMJ'21 = ஏப்ரல் 2021 முதல் ஜூன் 2021 வரை
- JAS'21 = ஜூலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை




# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

# குறுநிதி தொழில்துறையின் சாராம்சம்

## 30 செப்டம்பர் 2021 நிலவரப்படி

| 30 செப்டம்பர் 2021 | வங்கிகள் | SFBs | NBFC-MFIs | NBFCs | Not for profit MFIs | மொத்த தொழில்துறை |
|---|---|---|---|---|---|---|
| தனித்துவ செயலில் உள்ள கடன் பெற்றவர் ஆயிரத்தில்) | 24,779 | 12,280 | 23,348 | 6,538 | 785 | 67,730 |
| செயலில் உள்ள கடன்கள் (000) | 36,981 | 15,411 | 36,059 | 7,161 | 1,030 | 96,642 |
| போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில் ) JAS '21 | 92,725 | 36,863 | 79,932 | 14,621 | 1,982 | 226,123 |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) | 27,439 | 12,037 | 23,838 | 2,866 | 501 | 66,681 |
| சராசரி கடன் அளவு (ரூ.) JAS'21 | 35,609 | 34,023 | 34,617 | 41,027 | 28,285 | 35,085 |
| 30+ Delinquency (POS) | 12.96% | 10.59% | 7.51% | 6.51% | 2.60% | 10.14% |
| 90+ Delinquency (POS) | 3.48% | 3.02% | 2.51% | 2.04% | 1.23% | 2.95% |




- குறுந்தொழில் துறையின் மொத்த கடன் அளவு செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி ரூ.2,26,123 கோடி.
- JAS'21 காலாண்டில், வங்கிகள், SFBகள் & NBFC-MFIகள், மொத்த நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில் 90%க்கும் அதிகமாகவும், வழங்கப்பட்ட தொகையில் 95%க்கும் அதிகமாகவும் பங்களிக்கின்றன.
- வங்கிகள் மற்றும் NBFCகளின் சராசரி கடன்தொகை அளவு தொழில்துறையின் கடன்தொகை அளவை விட அதிகமாக உள்ளது
- என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ கள், என்.ப்.எஃப்.சி.கள் மற்றும் லாபத்திற்காக அல்லாத எம்.எஃப்.ஐகளின் 30+ நாட்கள் மற்றும் 90+ நாட்கள் கடன் தவணை தவறுதல்கள், மொத்த தொழில்துறையின் தவறுதல்களை விட குறைவாக உள்ளது.


**குறிப்பு :** MFI பிரிவில் ~6 கோடி தனிப்பட்ட நேரடி கடன் வாங்குபவர்கள் உள்ளனர். SFBகள், வங்கிகள், NBFC-MFIகள், NBFCகள் மற்றும் இலாப நோக்கற்ற MFIகளுடன் வாடிக்கையாளர்கள் பல உறவுகளைக் கொண்டிருப்பதால், தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் வேறுபாடு ஏற்படுகிறது.

# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்

*நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ. கோடியில்)*

| விவரங்கள் | செப் '20 | டிச' 20 | மார்ச்' 21 | ஜூன் '21 | செப்' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 93,409 | 96,683 | 109,867 | 95,674 | 92,725 |
| சிறு நிதி வங்கிகள் | 42,682 | 38,109 | 38,903 | 35,345 | 36,863 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 70,142 | 73,166 | 79,420 | 72,856 | 79,932 |
| என்.பி.எஃப்.சி | 19,838 | 18,988 | 18,992 | 16,140 | 14,621 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 1,772 | 1,872 | 2,095 | 2,045 | 1,982 |
| மொத்த தொழில்துறை | 227,843 | 228,818 | 249,277 | 222,060 | 226,123 |
| காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சி விகிதம் % | - | 0% | 9% | -11% | 2% |

## சந்தைப் பங்கு போக்குகள் - கடன் வழங்குபவர் வகையின்படி




- குறுநிதி துறையானது ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையான காலாண்டில் 2% Q-o-Q வளர்ச்சியைக் கண்டது.
- NBFC-MFIகள் செப்டம்பர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) 14% வளர்ச்சியைக் கண்டன மேலும் ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலாண்டில் 10% (Q-o-Q) வளர்ச்சி கண்டது.
- வங்கிகளின் நிலுவையிலுள்ள போர்ட்ஃபோலியோ, ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் 3% குறைந்துள்ளது.




# விநியோக போக்குகள்

## விநியோக போக்குகள் - நிறுவனவாரியாக

**விநியோகிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)**

| Lender Type | JAS' 20 | OND' 20 | JFM' 21 | AMJ' 21 | JAS'21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 46 | 101 | 111 | 42 | 77 |
| சிறுநிதி வங்கிகள் | 12 | 20 | 31 | 9 | 35 |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 32 | 65 | 78 | 19 | 69 |
| என்.பி.எஃப்.சி | 6 | 8 | 13 | 3 | 7 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 2 | 2 | 3 | 1 | 2 |
| மொத்த தொழில் துறை | 98 | 196 | 236 | 74 | 190 |

**கடன் வழங்குபவர் வகையின்படி சந்தைப் பங்கு போக்குகள்**





- JAS'20 உடன் ஒப்பிடும்போது, JAS'21 இன் போது வழங்கப்பட்ட கடனின் எண்ணிக்கை 94% மற்றும் வழங்கப்பட்ட தொகை 96% அதிகரித்துள்ளது.
- அனைத்து காலாண்டுகளிலும் வங்கிகள் மற்றும் NBFC-MFI களால் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்படுகின்றன
- JAS '20 முதல் JAS '21 வரை சிறுநிதி வங்கிகள் (SFB), கடன் வழங்கலின் அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் அதிக வளர்ச்சியைக் கண்டது.

# தொழில்துறையின் கடன் அளவு போக்குகள்

*வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)*

| Ticket Size | JAS' 20 | OND' 20 | JFM' 21 | AMJ' 21 | JAS' 21 | Y-o-Y Growth Rate |
|---|---|---|---|---|---|---|
| 0-10000 | 4 | 35 | 19 | 8 | 18 | 350% |
| 10000-20000 | 16 | 20 | 19 | 8 | 20 | 25% |
| 20000-30000 | 18 | 32 | 40 | 12 | 33 | 83% |
| 30000-40000 | 24 | 44 | 60 | 17 | 47 | 96% |
| 40000-50000 | 18 | 29 | 39 | 11 | 29 | 61% |
| 50000-60000 | 10 | 18 | 27 | 9 | 24 | 140% |
| 60000க்கு மேல் | 8 | 18 | 32 | 9 | 19 | 138% |
| மொத்தம் | 98 | 196 | 236 | 74 | 190 | 94% |
| Q-o-Q வினியோகிக்கப்பட்ட கடனின் வளர்ச்சி விகிதம் % | - | 100% | 20% | -69% | 157% | - |
| இந்தியாவின் சராசரி கடன் அளவு (ரூ.) | 34,724 | 32,174 | 38,792 | 35,781 | 35,085 | - |
| Q-o-QATSgrowthrate% | - | -7% | 21% | -8% | -2% | - |





- அனைத்து காலாண்டுகளிலும், ரூ.30000-40000 கடன் அளவு வகையின் கீழ் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்படுகின்றன.
- மொத்த கடனில் 40% கடன்கள் ரூ.30000-50000 கடன் அளவு வகையின் கீழ் வழங்கப்படுகின்றன.
- JAS' 20 இலிருந்து JAS' 21 வரையான காலகட்டத்தில் சராசரி கடன் அளவு 1% அதிகரித்துள்ளது.




# தொழில்துறை இடர் தோற்றவிவரம்

## தவணை தவறுதல்களின் போக்குகள்

| Reporting Quarter | 1-29 days past due | 30-59 days past due | 60-89 days past due | 90-179 days past due | 1-179 days past due |
|---|---|---|---|---|---|
| செப். ' 20 | 15.35% | 3.47% | 0.39% | 0.63% | 19.84% |
| டிச ' 20 | 7.50% | 4.73% | 3.49% | 4.96% | 20.68% |
| மார்ச் ' 21 | 4.55% | 2.90% | 2.01% | 4.12% | 13.58% |
| ஜூன் ' 21 | 14.90% | 10.14% | 3.38% | 3.01% | 31.43% |
| செப் ' 21 | 8.64% | 5.44% | 1.74% | 2.95% | 18.77% |





- ஜூன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையான காலகட்டத்தில், அனைத்துவகையான தவணை தவறுதல்களும் குறைந்துவிட்டன.
- ஜூன் 2021 தவிர அனைத்து காலாண்டுகளிலும், 60முதல் 89 நாட்கள் தவறிய தவணைகள் மிக குறைவாக உள்ளது.




# புவியியல் வெளிப்பாடு

# மாநிலம்/யூனியன் பிரதேச வாரியான நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ- செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி




- நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவில், முதன்மை 10 மாநிலங்கள் 82% பங்களிக்கின்றன.
- நிலுவையில் உள்ள மொத்த போர்ட்ஃபோலியோவில், ரூ.29,335 கோடியுடன் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது மற்றும் நிலுவையில் உள்ள மொத்த போர்ட்ஃபோலியோவில் 13% பங்களிக்கிறது.
- 30 செப்டம்பர் 2021 நிலவரப்படி தமிழ்நாடு, மேற்கு வங்காளம், பீகார், கர்நாடகா மற்றும் உத்தரபிரதேசம் ஆகியவை முதன்மை 5 மாநிலங்கள்.

## *30 செப்டம்பர் 2021 நிலவரப்படி, மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக 90+ நாட்கள் தவணை தவறுதல்கள்*




இந்த வரைபடம் ஒரு பொதுவான விளக்கப்படம் மட்டுமே மற்றும் இது குறிப்பு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை.
குறிப்பு: இந்த வரைபடம் செப்டம்பர் 2021 இல் நிறுவனங்கள் சமர்ப்பித்த தரவு/தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது..
ஜே&கே மாநிலத்திற்கான தரவு உருவமைப்பு முழு ஜே&கே மாநிலத்திற்கான தரவு சமர்ப்பிப்பின் அடிப்படையிலானது

- மேற்கு வங்காளத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் , மொத்த தொழில்துறையின் தவறுதல்களை விட அதிகம்.
- தமிழ்நாடு, பீகார், கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் மொத்த தொழில்துறை தவறுதல்களைவிட குறைவாக உள்ளது.




# விரிவான
# மாநில தோற்றம் :
# மத்திய பிரதேசம்

EQUIFAX Powering the World with knowledge ™

# மாநில தோற்றம் - மத்திய பிரதேசம்

| மத்திய பிரதெச தின்தோற்றம் - செப்டம்பர் 30, 2021 அன்று | வங்கி | SFBs | NBFC - MFIs | NBFCs | Not for Profit MFIs | தொழில் துறை |
|---|---|---|---|---|---|---|
| செயலில் உள்ள கடன்கள் ('000) | 1,858 | 919 | 2,800 | 408 | 51 | 6,036 |
| Portfolio Outstanding (` crore) | 4,277 | 2,236 | 6,552 | 766 | 89 | 13,920 |
| சந்தை பங்கு – நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ | 31% | 16% | 47% | 6% | 1% | - |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில் ) - JAS’21 | 1,434 | 845 | 1,920 | 114 | 27 | 4,340 |
| சராசரி கடன் அளவு ( ரூ. - JAS’21 | 36,006 | 33,629 | 34,638 | 41,499 | 24,795 | 34,938 |
| 30+ Delinquency (POS) | 12.34% | 9.27% | 8.38% | 11.70% | 2.15% | 9.88% |
| 90+ Delinquency (POS) | 3.92% | 3.56% | 2.53% | 4.44% | 0.78% | 3.22% |





- செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி மத்தியபிரதேசத்தின் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ.13,920 கோடி.
- நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவிற்கு அதிக பங்களிப்பு NBFC-MFI கள் மற்றும் அதைத் தொடர்ந்து வங்கிகள் அளிக்கின்றன.
- மத்தியப் பிரதேசத்தில் JAS ‘21 இன் போது ரூ.4,340 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- NBFC மற்றும் வங்கிகளின் சராசரி கடன் அளவு, மாநில சராசரி கடன் அளவோடு ஒப்பிடும்போது அதிகமாக உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள், குறுநிதித் துறையின் ஒட்டுமொத்த தவறுதல்களை விட அதிகமாக உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள அனைத்து கடன் வழங்குபவர்களில், லாப நோக்கற்ற MFIகள் மற்றும் NBFC-MFIகளின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் மிகக் குறைவு.

# மத்திய பிரதேசம் - தொழில் துறை கடன் அளவின் போக்குகள்

**No. of Loans Disbursed (in '000)**


| Ticket Size | JAS' 20 | OND' 20 | JFM' 21 | AMJ' 21 | JAS' 21 | Y-o-Y வளர்ச்சி விகிதம் % |
|---|---|---|---|---|---|---|
| 0-10000 | 22 | 124 | 106 | 39 | 99 | 350% |
| 10k-20k | 81 | 77 | 108 | 32 | 115 | 40% |
| 20k-30k | 125 | 192 | 245 | 52 | 234 | 87% |
| 30k-40k | 171 | 328 | 427 | 83 | 332 | 94% |
| 40k-50k | 122 | 196 | 270 | 51 | 193 | 58% |
| 50k-60k | 80 | 160 | 185 | 41 | 162 | 103% |
| 60k Plus | 51 | 113 | 171 | 33 | 107 | 110% |
| Total | 652 | 1,190 | 1,512 | 331 | 1,240 | 90% |
| Q-o-Q கடன் வினியோக வளர்ச்சி விகிதம் % | - | 83% | 27% | -78% | 275% | - |
| மத்திய பிரதேசத்தின் ATS ( ரூ ) | 35,123 | 35,410 | 37,498 | 34,747 | 34,938 | - |
| Q-o-Q சராசரி கடன் அளவு வளர்ச்சி விகிதம் % | - | 1% | 6% | -7% | 1% | - |




- *JAS '20 முதல் JAS '21 வரையான காலகட்டத்தில், மத்தியப் பிரதேசத்தில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியில் 90% கண்டுள்ளது.*
- *60%க்கும் அதிகமான கடன்கள் ரூ.20000-ரூ.50000 வரையான கடன் அளவு வகைகளில் வழங்கப்படுகின்றன.*
- *AMJ' 21 உடன் ஒப்பிடும்போது, JAS' 21 இல் மத்தியப் பிரதேசத்தின் சராசரி கடன் அளவு (ATS) 1% அதிகரித்துள்ளது.*

# மத்திய பிரதேசத்தின் போர்ட்ஃபோலியோ போக்குகள்


| விவரங்கள் | செப்' 20 | டிச' 20 | மார்ச்' | ஜூன்' 21 | செப்' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 4,181 | 4,358 | 5,052 | 4,291 | 4,277 |
| சிறுநிதி வங்கிகள் | 2,193 | 2,115 | 2,226 | 2,012 | 2,236 |
| என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ | 5,381 | 5,853 | 6,552 | 5,920 | 6,552 |
| என்.பி.எஃப்.சி | 1,164 | 1,167 | 1,093 | 861 | 766 |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 66 | 74 | 83 | 84 | 89 |
| மத்திய பிரதேசம் | 12,985 | 13,567 | 15,006 | 13,168 | 13,920 |
| Q-o-Q வளர்ச்சிவிகிதம்% | - | 4% | 11% | -12% | 6% |




- மத்தியபிரதேசம், செப்டம்பர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ அடிப்படையில் 7% ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) வளர்ச்சியைக் கண்டது.
- அனைத்து காலாண்டுகளிலும் நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ பங்களிப்பில் 70% க்கும் அதிகமானவை NBFC-MFIகள் மற்றும் வங்கிகள்.

# மத்திய பிரதேசம் : 90+ நாட்கள் தவணை தவறுதல்களின் போக்குகள்

| Lender Type | Sep' 20 | Dec' 20 | Mar' 21 | Jun' 21 | Sep' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 0.42% | 4.25% | 3.10% | 2.50% | 3.92% |
| சிறு நிதி வங்கிகள் | 0.20% | 4.16% | 3.26% | 2.07% | 3.56% |
| என்.பி.எஃப்.சி – எம்.எஃப்.ஐ | 0.95% | 5.67% | 2.56% | 3.51% | 2.53% |
| என்.பி.எஃப்.சி | 0.92% | 3.01% | 7.24% | 3.24% | 4.44% |
| லாப நோக்கு அல்லாத எம்.எஃப்.ஐ | 1.04% | 2.44% | 1.68% | 1.06% | 0.78% |
| மத்திய பிரதேசம் | 0.65% | 4.73% | 3.18% | 2.93% | 3.22% |




- மத்தியப் பிரதேசத்தின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் ஜூன் 2021 இல் 2.93% ஆக இருந்து, 2021 செப்டம்பரில் 3.22% ஆக அதிகரித்துள்ளது.
- இலாப நோக்கற்ற MFIகளில் மார்ச் 2021 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் குறைந்து வருவதைக் கண்டுள்ளது.

குறிப்பு : நிலுவையில் உள்ள கடன்களின் அடிப்படையில் தவணை தவறுதல்கள் கணக்கிடப்பட்டுள்ளது.




# லட்சிய மாவட்டங்கள்


# லட்சிய மாவட்டங்கள் - செப்டம்பர் 2021ன் படி ஓர் கண்ணோட்டம்

போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்)

வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) – அக் '20 முதல் செப். '21 வரை




30+ மற்றும் 90+ நிலுவையில் உள்ள கடன்களின் தவணை தவறுதல்கள் - கடன் வழங்குபவர் வாரியாக




| Aspirational Districts Growth Particulars | December 2017 | September 2021 | Growth % |
|---|---|---|---|
| செயலில் உள்ள வாடிக்கையாளர் ஊடுருவல் ('ஆயிரத்தில்) | 4,155 | 8,440 | 103% |
| வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) | 14,374 * | 34,595** | 141% |
| செயலில் உள்ள கடன்கள் ('000) | 6,925 | 13,203 | 91% |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ. கோடியில்) | 11,175 | 29,975 | 168% |
| 30+ நாட்கள் தவறிய தவணைகள் | 1.54% | 7.47% | - |
| 90+ நாட்கள்தவறியதவணைகள் | 0.75% | 2.28% | - |

- இலட்சிய மாவட்டங்களில், செப்டம்பர் 30, 2021 அன்று நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ.29,975 கோடி மற்றும் இது டிசம்பர் 2017 முதல் செப்டம்பர் 2021 வரையான காலகட்டத்தில் 168% அதிகரித்துள்ளது.
- இலட்சிய மாவட்டங்களில் அக்டோபர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை ரூ.34,595 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வங்கிகள் மற்றும் SFBகளின் கடன்களின் 30+ மற்றும் 90+ தவணை தவறுதல்கள், லட்சிய மாவட்டங்களின் ஒட்டுமொத்த 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்களை விட அதிகமாக உள்ளது.

குறிப்பு : * ஜனவரி 2017 முதல் டிசம்பர் 2017 வரை வினியோகிக்கப்பட்டது
** அக்டோபர்2020 முதல் செப்டம்பர்2021 வரையானதவணைதவறுதல்கள் POS

EQUIFAX

sidbi





# குறுந்தொழில் துறையின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி


# ஆண்டுக்கு ஆண்டு வினியோகத்தின் வளர்ச்சி

**கோவிட் தொற்றுநோய் மற்றும் நடமாட்ட கட்டுப்பாடுகள் குறுநிதித் தொழிலை மோசமாக பாதித்துள்ளன. குறுங்கடன் துறையில் *COVID-19* இன் தாக்கத்தை பகுப்பாய்வு செய்ய, கடந்த *3* ஆண்டுகளில் கடன் வழங்குபவர்கள் வாரியாக மற்றும் மாநில வாரியான போக்குகள் ஆதாரம், போர்ட்ஃபோலியோ நிலுவை மற்றும் தவணை தவறுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது.**

**வினியோகிக்கப்பட்ட கடன்களின்**
**எண்ணிக்கை (லட்சத்தில்)**





**வினியோகிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்)**





- *மார்ச் 2020 முதல் நாடு தழுவிய லாக்டவுன் காரணமாக குறுநிதித் துறை மந்தநிலையைக் கண்டது. அக்டோபர் 2018 முதல் செப்டம்பர் 2019 வரை, அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் அக்டோபர் 2019 இல் 28% மற்றும் 24% ஆகவும் கடன் பெறுதல் 24% ஆகவும் சுருங்கியது. விரிவாக்கப் பயன்முறைக்கு, அக்டோபர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை அளவு மற்றும் மதிப்பில் முறையே 35% மற்றும் 37% அதிகரித்துள்ளது*
- *அனைத்து கடன் வழங்குபவர்களிலும் NBFCக்கள் தொற்றுநோய்களின் போது மோசமாகப் பாதிக்கப்பட்டன மற்றும் அவர்களின் கடன் வழங்கல் அளவு அக்டோபர் 2018 முதல் செப்டம்பர் 2019 உடன் ஒப்பிடும்போது அக்டோபர் 2019 முதல் செப்டம்பர் 2020 வரை 40% ஆகவும், விநியோக மதிப்பின் அடிப்படையில் 39% ஆகவும் வரை குறைந்துள்ளது.*

## ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ வளர்ச்சி மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதலின் இயக்கம்

**Y-o-Y நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ. கோடியில்)**




**Y-o-Y 90+ நாட்கள் தவணை தவறுதல்கள்**





- *NBFCகள் மற்றும் இலாப நோக்கற்ற MFIகள் தவிர, அனைத்து கடன் வழங்குநர் பிரிவுகளும் செப்டம்பர் 2019 முதல் செப்டம்பர் 2021 வரை நேர்மறையான வளர்ச்சியைக் கண்டுள்ளன.*
- *NBFC-MFIகள் மட்டுமே செப்டம்பர் 2020 மற்றும் செப்டம்பர் 2021 இல் நேர்மறையான Y-o-Y வளர்ச்சியைக் கண்டன.*
- *வங்கிகள் செப்டம்பர் 2019 இல் மிகக் குறைந்த 90+ நாட்கள் தணை தவறுதல்களை கண்டது. அதே சமயம் செப்டம்பர் 2021 இல் இது அனைத்து கடன் வழங்குபவர்களிடத்திலும் அதிகமாக உள்ளது.*
- *செப்டம்பர் 2019 மற்றும் செப்டம்பர் 2020 உடன் ஒப்பிடும்போது, செப்டம்பர் 2021 இல் அனைத்து கடன் வழங்குநர்களின் வகையிலும், 90+ நாட்கள் தவறிய தவணைகள் அதிகரித்துள்ளன.*

# ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) முதன்மை 10 மாநிலங்களின் போர்ட்ஃபோலியோ வளர்ச்சி

| Top 10 States | செப்' 19 (POS `crore) | நிலை 2019 | செப்' 20 (POS `crore) | நிலை 2020 | செப்' 21 (POS `crore) | நிலை 2021 |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் நாடு | 29,383 | 1 | 33,708 | 1 | 29,335 | 1 |
| மேற்கு வங்காளம் | 28,661 | 2 | 33,560 | 2 | 27,932 | 2 |
| பீகார் | 20,938 | 3 | 24,838 | 3 | 26,791 | 3 |
| கர்னாடகா | 17,244 | 4 | 17,982 | 4 | 19,566 | 4 |
| மஹாராஷ்டிரா | 13,742 | 5 | 16,717 | 5 | 16,276 | 6 ↓ |
| அஸ்ஸாம் | 12,508 | 6 | 11,805 | 9 ↓ | 7,007 | 10 ↓ |
| உத்திர பிரதேசம் | 12,334 | 7 | 14,397 | 6 ↑ | 17,898 | 5 ↑ |
| ஒடிசா | 11,213 | 8 | 12,557 | 8 | 13,882 | 8 |
| மத்திய பிரதேசம் | 11,213 | 9 | 12,985 | 7 ↑ | 13,920 | 7 ↑ |
| கேரளா | 8,042 | 10 | 9,271 | 10 | 9,302 | 9 ↑ |

## முதன்மை 10 மானிலங்களின் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள்




- தமிழ்நாடு, மேற்கு வங்கம், பீகார், கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் ஒரே நிலையில் இருக்க முடிந்தது
- அஸ்ஸாம், செப்டம்பர் 2019 இல் 6 வது இடத்திலிருந்து 2020 செப்டம்பரில் 9 வது இடத்திற்கும், 2021 செப்டம்பரில் 10 வது இடத்திற்கும் சென்றது.
- மத்தியப் பிரதேசம் செப்டம்பர் 2019 இலிருந்து செப்டம்பர் 2020 இல் 7 வது இடத்திற்கு முன்னேறியது மற்றும் செப்டம்பர் 2021 ஆம் ஆண்டில் இன்னும் அதே நிலையில் உள்ளது.
- அனைத்து முதன்மை மாநிலங்களிலும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் செப்டம்பர் 2019 முதல் செப்டம்பர் 2021 வரை அதிகரித்துள்ளது

குறிப்பு : செப்டம்பர் 2019 POS அடிப்படையில் முதல் 10 மாநிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன
செப்டம்பர் 2020 மற்றும் செப்டம்பர் 2021க்கான 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் செப்டம்பர் 2019 உடன் ஒப்பிடப்படுகிறது.
செப்டம்பர் 2019 ஐ விட 90+ குற்றங்கள் அதிகமாக இருந்தால், மாநிலம் சிவப்பு நிறத்தில் இருக்கும். இல்லையென்றால் பச்சை நிறத்தில் இருக்கும்.

## இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி பற்றி :

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, **1990** இல் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி **(SIDBI)**, குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் நிதி, மேம்பாடு மற்றும் ஒத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மை நிதி நிறுவனம் ஆகும். பல ஆண்டுகளாக, சிட்பி அதன் பல்வேறு நிதி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம், சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல நம்பகமான நிறுவனங்களுடன் கைகோர்த்து, மொத்த **MSME** ஸ்பெக்ட்ரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஷன் **2.0** இன் கீழ் **SIDBI**, ஃபின்டெக் கடன் வழங்கும் பிரிவில் கிரெடிட் டேட்டா நுண்ணறிவுகளுக்கு, மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் தவிர, எம்எஸ்எம்இ துறையில் தகவல் சமச்சீரற்ற தன்மைக்கு தீர்வு காண, எம்எஸ்எம்இ பல்ஸ், எம்எஸ்எம்இ மற்றும் கிரிசிடெக்ஸின் ஹெல்த் டிராக்கர், எம்எஸ்இ உணர்வுகள் மற்றும் அபிலாஷைகளை அளவிடுவதற்கு, தொழில்துறை கடன் வழங்குபவர்கள் மற்றும் ஃபின்டெக் பல்ஸ் பற்றிய ஒரு விரிவான அறிக்கை, போன்ற பல்வேறு முயர்ச்சிகளை முன்னெடுத்துள்ளது.

## குறுநிதி வெளியில் சிட்பியின் பங்கு :

குறுநிதி நிறுவன இயக்கத்தை ஆதரிப்பதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய குறுநிதி இயக்கத்தை மேம்படுத்துவதில் SIDBI முன்னோடி பங்கு வகித்துள்ளது. மார்ச் 31, 2021 வரை வங்கியின் குறுநிதி முன்முயற்சிகளின் கீழ் ரூ.20,568 கோடி ஒட்டுமொத்த உதவி வழங்கப்பட்டது. இது சுமார் 4 கோடி நிறுவனங்களுக்குப் பயனளித்தது. MFI களுக்கான கடன் மற்றும் பங்கு ஆதரவு, இந்த நிறுவனங்களுக்கான திறன் மேம்பாட்டு ஆதரவு மற்றும் பெருநிறுவன நிர்வாக கலாச்சாரத்தை உள்ளீர்த்துக்கொள்வது, இணக்க மதிப்பீட்டு கருவிகள் (compliance assessment tools) போன்றவற்றை ஆதரிப்பதன் மூலம் நன்கு பூர்த்தி செய்யப்படுகிறது. குறுநிதி தொழில் துறையை, பலவீனமான தொடக்கத்திலிருந்து ஒரு முழுமையான தொழில் பிரிவுக்கு முன்னேற்றுவதில் உதவியது மட்டுமல்லாது, அதன் இணை MFI களில் 8 பேர், சிறுநிதி வங்கிகளாகவும் (SFBs)/ /யுனிவர்சல் வங்கிகளாகவும் மாற்றியதில் சிட்பி பங்கு வகித்துள்ளது. குறு நிதி வழங்குவதில் (micro lending), சிறு கடன்களை நேரடியாக SIDBI இலிருந்து (கூட்டாண்மை ஏற்பாடுகள் மூலம்), வட்டி விகிதத்தில் சந்தை விகிதங்களை விடக் குறைவாகக் கிடைக்கச் செய்தது ஒரு புதுமையான முயற்சியாகும். இந்த "பிரயாஸ்" என்று பெயரிடப்பட்ட முயற்சியின் கீழ், மிகவும் ஏழ்மையில் உள்ள மைக்ரோ கடன் வாங்குபவர்களுக்கு சிறிய அளவு கடன்களை ரூ. 0.50 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை, கூட்டாண்மை ஏற்பாடு மாதிரியின் கீழ், சந்தை விகிதங்களை விட ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி விகிதங்களுடன் இந்த வங்கி வழங்கி வருகிறது.

# ஈக்விஃபாக்ஸ் பற்றி :

ஈக்விஃபாக்ஸ் என்பது உலகளாவிய தகவல் தீர்வுகள் நிறுவனமாகும். இது நம்பகமான தனிப்பட்ட தரவு (data), புதுமையான பகுப்பாய்வு, தொழில்நுட்பம் மற்றும் தொழில் நிபுணத்துவத்தை அளித்து, உலகெங்கிலும் உள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அறிவை நுண்ணறிவுகளாக மாற்றி அதன் மூலம் அதிக தகவலறிந்த வணிக மற்றும் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க உதவும் ஆற்றல் அளிக்கிறது.

அட்லாண்டா, ஜீஏ வை தலைமையிடமாக கொண்ட ஈக்விஃபாக்ஸ், வட அமெரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 24 நாடுகளில் செயல்படுகிறது அல்லது முதலீடு செய்துள்ளது. இது ஸ்டாண்டர்ட் & புவர்ஸ் (S&P) 500® இன்டெக்ஸில் உறுப்பினராக உள்ளது மற்றும் அதன் பொதுவான பங்கு நியூயார்க் பங்குச் சந்தையில் (NYSE) EFX சின்னத்தில் வர்த்தகம் செய்யப்படுகிறது. ஈக்விஃபாக்ஸ் உலகம் முழுவதும் 11,000 ஊழியர்களை பணியில் அமர்த்தி உள்ளது. கடன் துறையில் 120 ஆண்டுகளுக்கும் மேலாக உலகளாவிய பாரம்பரியத்துடன் உள்ள ஈக்விஃபாக்ஸ், 2010 இல் இந்திய சந்தையில் ஒரு இருப்பை நிறுவியது மற்றும் சிஐசியாக(CIC) செயல்பட ரிசர்வ் வங்கியால் உரிமம் பெற்றது. கடந்த 9 ஆண்டுகளில், இந்த கடன் பணியகம், வங்கிகள், NBFC கள், MFI கள் மற்றும் காப்பீட்டாளர்கள் உட்பட 4000+ உறுப்பினர்களாக வளர்ந்துள்ளது. இந்த உறுப்பினர்கள் மில்லியன் கணக்கான இந்திய மக்கள்தொகை மற்றும் அதன் நுகர்வோர்களின் திருப்பிச் செலுத்தும் தகவல்களின் தரவை வழங்குகிறார்கள். 2014 ஆம் ஆண்டில், ஈக்விஃபாக்ஸ் ஒரு பகுப்பாய்வு நிறுவனத்தை வாங்கியதன் மூலம் இந்தியாவில் அதன் தடம் மேலும் வளர்ந்தது. ஈக்விஃபாக்ஸ் அனலிட்டிக்ஸ் பிரைவேட். லிமிடெட் என்பது இந்தியாவில் ஈக்விஃபாக்ஸின் முழுச் சொந்தமான பகுப்பாய்வு நிறுவனமாகும். இது இணையற்ற தனிப்பயனாக்கப்பட்ட பகுப்பாய்வு தீர்வுகளை வழங்கி, வணிகங்களின் செயல்திறன் மற்றும் நுகர்வோரின் வாழ்க்கை இரண்டையும் வளமாக்குகிறது.


## கருத்து மறுப்பு

இந்த மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் அறிக்கையை (அறிக்கை) ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் லிமிடெட் (ஈக்விஃபாக்ஸ்) தயாரிக்கிறது. அறிக்கையை அணுகி பயன்படுத்துவதன் மூலம் பயனர் அத்தகைய பயன்பாடு இந்த கருத்து மறுப்புக்கு உட்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார். இந்த அறிக்கை ஈக்விஃபாக்ஸ் இன் உறுப்பினர்களாக உள்ள குறுநிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட செப்டம்பர் 2021 தரவுகளின் தகவல்களை கணிசமான அடிப்படையாகக் கொண்டது. அறிக்கையை தயாரிப்பதில் ஈக்விஃபாக்ஸ் நியாயமான அக்கறை எடுத்துக் கொண்டாலும், குறுநிதி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தவறான அல்லது குறைவான தகவல்களால் ஏற்படும் துல்லியம், பிழைகள் மற்றும் / அல்லது குறைகளுக்கு ஈக்விஃபாக்ஸ் பொறுப்பேற்காது. மேலும், ஈக்விஃபாக்ஸ் அறிக்கையில் உள்ள தகவல்களின் போதுமான தன்மை அல்லது முழுமையை உறுதிப்படுத்தாது மற்றும்/அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் அதன் பொருந்தக்கூடிய தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை அல்லது அறிக்கையின் எந்தவொரு அணுகலுக்கும் அல்லது நம்பகத்தன்மைக்கும் ஈக்விஃபாக்ஸ் பொறுப்பல்ல, மேலும் ஈக்விஃபாக்ஸ் அத்தகைய அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படையாக மறுக்கிறது. இந்த அறிக்கை எந்தவொரு விண்ணப்பத்தையும், தயாரிப்பையும் நிராகரிப்பது/மறுப்பது அல்லது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரை அல்ல, அல்லது ஈக்விஃபாக்ஸ் இன் எந்தவொரு பரிந்துரையும் (i) கடன் வழங்கவோ அல்லது கடன் கொடுக்கவோ இல்லை. (ii) சம்பந்தப்பட்ட தனிநபர் / நிறுவனத்துடன் எந்தவொரு நிதி பரிவர்த்தனையிலும் நுழையவோ அல்லது நுழைய கூடாது என்றோ இல்லை. அறிக்கையில் உள்ள தகவல்கள் ஆலோசனையைக் கொண்டிருக்கவில்லை, மேலும் இந்த அறிக்கையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் அதன் கருத்தில் விவேகமான அனைத்து தேவையான பகுப்பாய்வுகளையும் பயனர் மேற்கொள்ள வேண்டும். அறிக்கையின் பயன்பாடு கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2005, கடன் தகவல் நிறுவன விதிமுறைகள், 2006, கடன் தகவல் நிறுவன விதிகள், 2006 ஆகியவற்றின் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. அறிக்கையின் எந்தப் பகுதியும் முன் ஒப்புதல்கள் இன்றி நகலெடுக்கவோ, புழக்கத்தில் விடவோ, வெளியிடப்படவோ கூடாது.

CONTACT DETAILS

Equifax Credit Information Services Private Limited

## தொடர்பு விவரங்கள்


| | |
|---|---|
| ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்<br>யூனிட் எண் 931, 3வது தளம், கட்டிட எண் 9,<br>சாலிட்டைர் கார்பொரேட் பார்க்,<br>அந்தேரி காட்கோபார் லிங்க் ரோடு,<br>அந்தேரி (கிழக்கு),<br>மும்பை - 400 093<br><br>கட்டணமில்லா எண்.: 1800 2093247<br>ecissupport@equifax.com | இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி<br>ஸ்வாவலம்பன் பவன்,<br>ப்ளாட் எண் சி-11, 'ஜீ' ப்ளாக்,<br>பாந்திரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கிழக்கு),<br>மும்பை - 400 051<br>மஹாராஷ்டிரா<br><br>கட்டணமில்லா எண்.: 1800 226753<br>www.sidbi.in/en |



பதிப்புரிமை © 2021, Equifax Inc., அட்லாண்டா , ஜார்ஜியா . அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. Equifax என்பது Equifax Inc இன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரையாகும்.